ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/49 - 2025 ජූලි 02 වැනි බදාදා - 2025.07.02

2443/49 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்**

**பிரிவு 155 (1) இன் கீழான ஒழுங்குவிதி**

2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 155 இன் உப பிரிவு (1) இல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், இந்த ஒழுங்குவிதியின் மூலம் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 155 இன் உப பிரிவு (1) இன் கீழ் விதிக்கப்பட்டு அறவிடப்படவேண்டிய தீர்வை வீதத்தினை இதன் அட்டவணையில் குறித்துரைக்கின்றேன்.

விதிக்கப்பட்டு அறவிடப்படவேண்டிய தீர்வை வீதம் தொடர்பாக 2017, யூன் 19 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2024/3 இல் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் 2023, சனவரி 26 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2316/32 இல் பிரசுரிக்கப்பட்ட கட்டளை என்பன இத்தால் நீக்கப்படுகின்றன.

இந்த ஒழுங்குவிதியானது 2025, ஓகத்து 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்.

நிதி,திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2025, யூலை 02.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *விடயம்* | *பிணையம்* | *வீதம்* |
|---|---|---|
| (1) | பட்டியலிடப்பட்ட உரித்துவம் தொடர்பாக ஏற்புடையதான வீதம்<br>(i) (அ) உள்ளூர் நிறுவனங்களினால் வழங்கப்பட்டு மற்றும் பட்டியலிடப்பட்டு இலங்கை ரூபாயில் பெயரிடப்பட்ட பங்குகளில் முதலாவது ரூபா 100 மில்லியன் வரைக்குமான மற்றும் உள்ளடங்கலான ஒவ்வொரு வர்த்தகத்திற்கும், வர்த்தகத்தின் பெறுமதியில்<br>(ஆ) உள்ளூர் நிறுவனங்களினால் வழங்கப்பட்டு மற்றும் பட்டியலிடப்பட்டு வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்ட பங்குகளில் அமெரிக்க டொலர்கள் 500,000 வரைக்குமான மற்றும் உள்ளடங்கலான அல்லது அதற்குச் சமமான அந்தந்த நாணயத்தில் ஒவ்வொரு வர்த்தகத்திற்கும், வர்த்தகத்தின் பெறுமதியில் | வர்த்தகத்தின் பெறுமதியில் 0.072% |
| | (ii) (அ) உள்ளூர் நிறுவனங்களினால் வழங்கப்பட்டு மற்றும் பட்டியலிடப்பட்டு இலங்கை ரூபாயில் பெயரிடப்பட்ட பங்குகளில் முதலாவது ரூபா 100 மில்லியனுக்கு மேலான ஒவ்வொரு வர்த்தகத்திற்கும் அதன் பின்னரான வர்த்தகத்தின் பெறுமதியில்<br>(ஆ) உள்ளூர் நிறுவனங்களினால் வழங்கப்பட்டு மற்றும் பட்டியலிடப்பட்டு வெளிநாட்டு நாணயத்தில் பெயரிடப்பட்ட பங்குகளில் அமெரிக்க டொலர்கள் 500,000 இற்கு மேலான அல்லது அதற்குச் சமனான அந்தந்த நாணயத்தில் ஒவ்வொரு வர்த்தகத்திற்கும், வர்த்தகத்தின் பெறுமதியில் | வர்த்தகத்தின் பெறுமதியில் 0.0450% |
| (2) | கம்பனிகள் கடன் பிணையங்கள் தொடர்பாக ஏற்புடைய வீதம் (பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன்கள் மற்றும் பொது பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பட்டியலிடப்படா தொகுதிக் கடன்கள்)<br>பட்டியலிடப்பட்ட உயர் விளைவுடைய கம்பனிகள் கடன் பிணையங்கள் தொடர்பாக ஏற்புடைய வீதம்<br>கொழும்புப் பங்குச் சந்தையின் எதிர்தளத்தின் (Over the Counter Platform) மீது மேற்கொள்ளப்படும், நிறுவனங்களினால் வழங் கப்பட்ட தாபனப் படுகடன் பிணையங்களிலுள்ள ஒவ்வொரு மீள் கொள்வனவு வர்த்தகம் | வர்த்தகங்களின் மொத்த பெறுமதியில் 0.01% இனை 3 ஆல் வகுத்து<br>வர்த்தகத்தின் பெறுமதியில் 0.006%<br>மீள்கொள்வனவு வர்த்தகத்தின் பெறுமதியில் 0.006% |
| (3) | பட்டியலிடப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்புகளின் கூறுகள் தொடர்பில் ஏற்புடையதான வீதம் | வர்த்தகத்தின் பெறுமதியில் 0.02% |
| தீர்வை ஏற்புடைய நோக்கத்திற்காக மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தகத்தின் பெறுமதியானது ஒரே வர்த்தக நாளில் ஒரு நபரினால் ஒரே பிணையத்தில் நிறைவேற்றப்பட்ட வர்த்தகங்களின் மொத்த பெறுமதியாகும். | | |

EOG 07-0099

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.